முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 775**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**12.11.2021**, வெள்ளிக்கிழமை

1. கருணை வடிவான அரங்கனே
   கலியுகத்தைக்காக்க வந்த தேசிகனே
   ஆறுமுகன் என் அவதாரமாக உள்ள அரங்கனே
   உலகோரை மீட்கும் மாதவராஜனே
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   வரங்கள் பெற்று என்பால் உயர் சக்தியாக
   வையகத்தை தர்மவழிகாட்டி காக்கின்ற
3. காக்கின்ற ஞான தேசிகனே
   கலியுகத்தில்நீ என் மகாசக்தியப்பா
   தேக்கமின்றி உந்தனுக்கு நித்தம்நித்தம்
   தெய்வபலம் கூட்டி ஆறுமுகன் யான் அருள
4. அருளுகின்ற உன் மார்க்கமே உலகத்தை
   அறிவிப்பேன் மாற்றம் செய்து காக்கக்கூடும்
   இருள் என்கின்ற இந்த மாயசக்திகளெல்லாம்
   யுகபரத்தில் அரங்கன் உன் தயவாலே அகன்றோடும்
5. ஓடியே உன் உபதேச ஞான வழி
   உலகமே சன்மார்க்க வழிக்கு திரும்பி
   நாடிய மக்களெல்லாம் ஞானிகளாகி
   ஞான ஆட்சிக்காலத்தை ஞானபண்டிதன் யானும்
6. யானுமே அரங்கன் உன்வழி உருவாக்கி அழிவில்லாத பேருலகை ஆறுமுகன்
   யான் அமைப்பேன் அமைக்கவே உலகமெங்கும் உன் ஆன்மீக ஞான வழிகள்
   பிழையற தொண்டர்களால் பின்பற்றப்பட்டு
   பேருலகமே ஞானிகள் நிறைந்த பூமியாக மாறி
7. மாறியே உலகம் அற்புதம் காணும்
   மகத்துவத்தை ஆறுமுகன் யான்
   அரங்கன் உன் வழி
   உலகமாற்றமாக நடத்தி அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–